# 16

# சபையில் பிரவேசித்தல்

*நல்ல உடையைப் போன்ற சில விஷயங்கள் விலை உயர்ந்தவைகளாக இருந்தாலும் உண்மையில் அவைகள் மதிப்புடையவைகளாக இருப்பதில்லை; சூரிய வெளிச்சம் அல்லது மழையைப் போன்ற சில விஷயங்கள் விலையற்றவைகளாக இருந்த போதிலும் அவைகள் மதிப்புடையவைகளாக இருக்கின்றன; சில விஷயங்கள் மிகவும் அதிகமான விலையுள்ளவையாகவும் அதே சமயத்தில் மிகவும் மதிப்புள்ளவைகளாகவும் இருக்கின்றன-கிறிஸ்துவின் சபையானது இவ்வகையைச் சேர்ந்ததாகவே இருக்கின்றது.*

*சபையின் விலைமதிப்பில்லாத தன்மையைப் பற்றி புதிய ஏற்பாடு சந்தேகத்திற்கிடமின்றி விளக்குகின்றது. குறைந்தது மூன்று வழிகளில் அதன் மதிப்பானது கொடுக்கப்படுகின்றது: முதலாவது, அதன் தெய்வீகத் தொடக்கத்தில் நாம் மதிப்பைக் காணுகின்றோம். பரலோகத்தின் நித்திய ஆலோசனையில் அது திட்டமிடப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது (எபே. 3:10, 11), மற்றும் இயேசு இந்த பூமியில் நிறைவேற்றிய ஊழியத்தின் மூலமாக அது ஆயத்தம் பண்ணப்பட்டது (மத். 4:17). அது ஒரு தெய்வீக முன்தீர்மானமேயாகும், தவறாகப்பட்ட பின் தீர்மானமல்ல. இரண்டாவது, அதன் விலையேறிய கிரயத்தில் அதன் மதிப்பை நாம் காணுகின்றோம். அது கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்டதாக பவுலின் மூலம் நமக்கு கூறப்பட்டுள்ளது (அப். 20:28). சபையை நிலைப்படுத்துவதே கிறிஸ்துவினுடைய மரணத்தின் முடிவான நோக்கமாகும். கொள்ளும் கிரயமானது மதிப்பைச் சுட்டிக்காட்டுமென்றால், கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்ட சபையானது உலக அமைப்புகள் எல்லாவற்றிலும் மிகவும் அதிக மதிப்புடையதாகும். மூன்றாவது, அதன் மேல்*

வைக்கப்பட்டுள்ள மாபெரும் மதிப்பீட்டில் அதன் மதிப்பை நாம் காணுகின்றோம். மற்ற எல்லாத் தேடுதல்களைக் காட்டிலும் முன்னதாக நாம் பரலோக ராஜ்யத்தைத் தேட வேண்டும் என்று கிறிஸ்து நம்மை வற்புறுத்தினார். அவர், "மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறான்" (மத். 13:45, 46) என்று கூறினார். அவர் சபையை ஒரு விலையுயர்ந்த முத்தோடு ஒப்பிடுவதுமின்றி, அதை எல்லா முத்துக்களிலும் அதிக விலை உயர்ந்த முத்தோடு ஒப்பிட்டார்!

புதிய ஏற்பாட்டின் சபையைப் பொருட்படுத்தாமல் விடுவதென்பது தவறுகளில் எல்லாம் பெரிய தவறாக இருக்கும் என்பதை, சபையின் மகாபெரிய மதிப்பானது நமக்குத் தெரியப்படுத்துகின்றது. கர்த்தருடைய சபையைத் தேடி அதில் பிரவேசிக்காதிருந்தால், கோடீஸ்வரரும் கூட அநாதையைப் போலவே இருக்கிறார். சபைக்குப் புறம்பே இருக்கும் மாபெரும் மனிதர்கூட மிகவும் சிறிய மனிதராய் இருக்கிறார்.

சபையின் இந்த தவறாக அளவிட முடியாத மதிப்பின் வெளிச்சத்தில், பகுத்தறிவானது, "சபைக்குள் பிரவேசிப்பது எப்படி?" என்று நேர்மையாக நாம் கேட்கும்படி கட்டளையிடுகின்றது. கவனிப்பதற்கு இதைக்காட்டிலும் பெரிய கேள்வி ஒருவேளை இருக்க முடியாது. இந்தக் கேள்விக்குப் புதிய ஏற்பாடு கூறும் பதில்களைக் கண்டுபிடிக்க நம்மை நாமே ஒப்படைப்போம்.

## பதில் அறிவிக்கப்பட்டது

கிறிஸ்து இப்பூமியில் தமது ஊழியத்தை நிறைவேற்றிப் பரலோகம் சென்ற பிறகு அவரது சீஷர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதில் கிறிஸ்து திட்டவட்டமாயிருந்தார். புதிய ஏற்பாட்டில் அவருடைய இந்தக் கட்டளை பற்றி ஏறக்குறைய முழுமையான மூன்று வசனக் குறிப்புகள் இருக்கின்றன (மத். 28:18-20; மாற். 16:15, 16; லூக். 24:46, 47). இவ்வசனப் பகுதிகளின் முக்கியத்துவத்தை இலேசாக எடை போட்டு விட முடியாது. அவைகள் கிறிஸ்தவ யுகம் முழுவதிற்குமான கிறிஸ்துவின் வழி நடத்துதல்களை அவரது சீஷர்களுக்குக் கொடுக்கின்றன.

*முதலாவது, கிறிஸ்து தமது சீஷர்களுக்கு, "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற். 16:15) என்றபோது, உலகளாவிய கட்டளையாக அதைக் கொடுத்தார். இரண்டாவதாக, சுவிசேஷமானது பிரசங்கிக்கப்படுகையில் இரட்சிப்பு அளிக்கப்படுவதற்கான நிபந்தனைகளை அவர் குறிப்பிட்டார். அவர் தமது சீஷர்கள் என்ன செய்ய வேண்டும்- "போய்" - என்பதைக் கூறினார், மற்றும் அவர்கள் என்ன சொல்ல வேண்டும் - "சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" - என்பதையும் கூறினார். "போய்" மற்றும் "சுவிசேஷம்" என்ற வார்த்தைகளில் அவர், அவர்களின் எதிர்கால ஊழியத்தைச் சுருக்கிக் கூறினார்.*

*மாற்குவின் சுவிசேஷத்தின்படி ஒருமுறை கிறிஸ்து இந்தக் கட்டளையைக் கொடுத்து விசுவாசத்தின் நிபந்தனையை வலியுறுத்தினார். அவர், "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற். 16:15, 16) என்று கூறினார். பிரதான கட்டளையின் இந்தப் பதிவின்படி, ஞானஸ்நானம் என்பது ஒரு நிபந்தனையாகவே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் விசுவாசம் இங்கு வலியுறுத்தப்படுவதாகக் காணப்படுகின்றது.*

*லூக்காவின் சுவிசேஷத்தின்படி, இன்னொருமுறை கிறிஸ்து இந்தக் கட்டளையைக் கொடுக்கையில் மனந்திரும்புதலை வற்புறுத்தியதாக உள்ளது. அவர், "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் பாவமன்னிப்புக்கான[1] மனந்திரும்புதலானது எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக். 24:46, 47) என்று சொன்னார். பாவத்திலிருந்து தேவனிடத்திற்குத் திரும்புகின்ற மனந்திரும்புதலானது கிறிஸ்துவின் யுகத்தில் பிரசங்கிக்கப்படும் சுவிசேஷத்தின் முக்கிய கருத்தாக இருக்க வேண்டியதாயிற்று.*

*கிறிஸ்து இந்தக் கட்டளையை கலிலேயாவில் ஒரு மலையின் மேல் கொடுத்ததாக, அதில் அவர் ஞானஸ்நானத்தை வலியுறுத்தியதாக மத்தேயு சித்தரித்தார். அவர், ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து,*

நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார் (மத். 28:18-20).

ஆகவே, இரட்சிப்பானது விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் என்ற மூன்று நிபந்தனைகளின் பேரிலேயே தரப்பட முடியுமென்பதும், இவை ஒவ்வொன்றும் நமது மீட்பரால் விதிக்கப்பட்ட பிரதான கட்டளை பற்றிய தனித்தனியான மூன்று வசனக் குறிப்புகளில் வலியுறுத்தப்பட்டதென்றும் காணுகின்றோம்.

இந்த மூன்று நிபந்தனைகளும் தெளிவானவைகளாகவும், சுலபமாய் உணரக் கூடியவைகளாகவும் இருக்கின்றன. இந்த நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு கர்த்தருடைய திட்டத்தில் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளாமல் இருக்கின்ற எவரும் இயேசுவின் கட்டளையை கருத்தாழத்துடன் கவனிக்க முடியாது. கர்த்தருடைய இராஜ்யம் அல்லது சபைக்குள் பிரவேசிப்பதற்கான சூழ்நிலைகள் அல்லது நிபந்தனைகள் இவைகளில் நிலைநிறுத்தப் படுகின்றன. இவைகள் கிறிஸ்துவின் யுகம் முழுவதிலும் ஆளுகை செய்ய வேண்டியதாயுள்ளது.

## பதில் விரிவாக்கப்பட்டது

இரட்சிப்புக்கான நிபந்தனைகள் புதிய ஏற்பாட்டில் தவறாகப் புரிந்து கொள்ளாத வகையில் தரப்பட்டுள்ளதோடு மாத்திரமல்ல, அவைகள் அப்போஸ்தலருடைய நடபடிகளில் தெளிவாக விவரிக்கப் பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, அந்தப் புத்தகமானது சபை நிலை நாட்டப் படுதல் என்ற சிலிர்ப்பு மிக்க வரலாற்றுடன் தொடங்குகின்றது. அப். 2ல் பேதுருவின் பிரசங்கத்தினால் இருதயத்தில் குத்தப்பட்ட திரளான கூட்டத்தார், ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கதறினார்கள். இயேசுவில் கொண்டிருந்த விசுவாசமே அவர்களை இவ்விதமாகக் கதறும்படி தூண்டியது. அவர்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் படியாகப் பேதுரு கட்டளையிட்டார் (அப். 2:38). அந்த நாளில் மூவாயிரம் பேர் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள் (அப். 2:41). இதற்கு ஏற்ற வகையில், அப். 2:47ஆ-வில் "இரட்சிக்கப்படுகிறவர்

*களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்” என்று கூறப்படுகின்றது. அவர்கள் சேர்க்கப்பட்ட அக்குழுவானது பின்னாளில் சபை என்று குறிப்பிடப்படுகின்றது (அப். 5:11). நமது கர்த்தர், தமது நிறைவான கட்டளையில், நம்பிக்கை (விசுவாசம்), மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய நிபந்தனைகளின் பேரிலேயே இரட்சிப்பானது அறிவிக்கப்பட வேண்டுமென்று குறிப் பிட்டார். பெந்தெகொஸ்தேயன்று சபைக்குள் பிரவேசித்தவர்கள் இந்த மூன்று நிபந்தனைகளையும் நிறைவேற்றினார்கள்.*

*அப். 8ல் இன்னொரு எடுத்துக்காட்டு காணப்படுகின்றது. அப். 8ன் பிற்பகுதியில், பிலிப்பென்பவர் பிரசங்கிக்கும்படியாகத் தெற்கு முகமாய்ச் செல்லும்படி தூதன் ஒருவர் கூறினார் (அப். 8:26). ஒரு குறிப்பிட்ட சந்தியில், எத்தியோப்பிய மந்திரி ஒருவர் இரதத்தில் பயணம் செய்வதைப் பிலிப்பு பார்த்தார் (அப். 8:27, 28). இந்த மனிதர் மிகவும் தேவபக்தியுள்ளவராய் இருந்தார், ஆனால் இன்னும் கிறிஸ்தவராகவில்லை. பிலிப்பு அந்த இரதத்தினருகில் சென்று அவருடன் சேர்ந்துகொள்ளும்படியாக அவருக்கு பரிசுத்த ஆவியானவர் அறிவுறுத்தினார் (அப். 8:29). அவர் அவ்விதமே ஓடிப் போய்ச் சேர்ந்தபோது, அந்த எத்தியோப்பிய மந்திரி ஏசாயாவின் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்ததையும், அதன் அர்த்தம் அவருக்கு விளங்காதிருந்ததையும் கண்டுபிடித்தார் (அப். 8:31). பிலிப்பு, அவர் வாசித்துக் கொண்டிருந்த வேதவசனத்திலிருந்து தொடங்கி, அந்த எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவின் வரலாற்றை விவரித்துக் கூறினார் (அப். 8:35), அப்போது அவர் கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து நமது பாவங்களுக்காக மரித்தது பற்றிய எல்லா வற்றையும் சந்தேகத்திற்கிடமின்றி கூறியிருப்பார்.*

*கிறிஸ்துவைப் பற்றிப் பேசிக்கொண்டே அவர்கள் இவ்விதமாய்ப் பயணம் செய்கையில், தண்ணீருள்ள ஒரு இடத்திற்கு வந்தார்கள். அந்த எத்தியோப்பிய மந்திரி, தாம் ஞானஸ்நானப்படுத்தப்படுவது ஏற்றது என்று விசுவாசித்தபடியால்[2] “நான் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள முடியுமா?” என்று கேட்டார். அவர்கள் இரதத்தை நிறுத்தி, தண்ணீருக்குள் சென்றார்கள், பிலிப்பு அந்த எத்தியோப்பிய மந்திரியை முழுக்காட்டினார் (அப். 8:38). எத்தியோப்பிய மந்திரி தமது ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து, சந்தோஷத்தோடே தம் வழியில் போனார்.*

*நமது கர்த்தர் தமது நிறைவான கட்டளையில் இரட்சிப்புக்கு*

விதித்திருந்த நிபந்தனைகள் மீண்டும் ஒருமுறை பின்பற்றப்பட்டன. பிலிப்புவினால் செய்யப்பட்ட பிரசங்கத்தின் விளைவாக (அப். 8:35, 36) கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தல் என்பது உண்மை நிலையானது. அந்த எத்தியோப்பிய மந்திரி தேவபக்தியுள்ள மனிதராயிருந்து, தேவனுடைய சித்தத்தின்படி செய்வதற்கு உண்மையாகவே முயற்சி செய்து கொண்டிருந்தார். ஆகவே, பிலிப்பு கொண்டு வந்த கிறிஸ்து வைப் பற்றிய செய்தியை அவர் ஏற்றுக்கொண்டதே அவரது மனந் திரும்புதலுக்கு ஆதாரமாக உள்ளது. அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தில் வேறு எந்த இடத்தைக் காட்டிலும், இந்த இடத்தில் ஞானஸ்நானம் என்பது மிகவும் தெளிவாகச் சித்தரிக்கப் படுகின்றது. பிலிப்புவும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீருக்குள் சென்றார்கள், பிலிப்பு அவரை (மந்திரியை) முழுக்காட்டினார். ("அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் மனமாற்றத்திற்கான எடுத்துக்காட்டுகள்" என்ற அட்டவணையைப் பார்க்கவும்.)

நீங்கள் ஒரு அரசாங்கத்தின் கீழ் வாழ்ந்து, அந்த அரசரை உங்கள் சொந்த நண்பராக அறிந்திருப்பது பற்றிக் கற்பனை செய்து பாருங்கள். ஒருநாள், அந்த அரசருடன் பேசிக் கொண்டிருக்கும்போது, பிற்பாடு அவரை நீங்கள் பார்க்கும்படி வந்தால், அவர் நீங்கள் செலுத்த வேண்டிய வரிகளை எல்லாம் இரத்து செய்து விடுவதாக உங்களுக்குக் கூறப்படுகின்றது என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் மகிழ்ச்சி யுடன் இந்தச் செய்தியைப் பெற்றுக் கொண்டு, ஒரு மாத காலத்தில் மறுபடியும் அவரைச் சந்திக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொள்கின்றீர்கள். அந்த அரசரை மறுபடியும் சந்திக்கச் செல்லும் போது, உங்கள் வரிகள் இரத்து செய்யப்படுவது பற்றி எதிர்பார்த்து நீங்கள் செல்வது உறுதி. நீங்கள் அரண்மனை சென்று சேர்ந்த பொழுது, அரசர் இன்னொரு நாட்டிற்குப் பயணம் சென்றுள்ளார் என்று உங்களுக்குக் கூறப்படுகின்றது. நீங்கள் அரசரைத் திரும்பி வந்து பார்த்தால் உங்களது வரிகள் இரத்து செய்யப்படும் என்று அரசர் கூறியதாக அரண்மனை வாயிற்காவலனிடம் சொல்லுகின்றீர்கள். அதற்கு அந்த வாயிற்காவலன், "அரசர் உங்களுக்கு விசேஷித்த ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்" என்று கூறுகின்றான். பன்னிரெண்டு நிர்வாகிகள் இருக்கும் அறையொன்றிக்குள் உங்களை அழைத்துச் செல்கிறான். அவர்களிடம் சென்று நீங்கள் உங்களைப் பற்றிச் சொல்லுகின்றீர்கள். அதற்கு அவர்கள், "அரசர் இங்கிருந்த வேளையில், அவர் கூறும் ஒரு வார்த்தையினாலே உங்கள் வரிகளை இரத்து

*செய்வதற்கு அதிகாரமுள்ளவராயிருந்தார், ஆனால் அந்த அரசர் இப்போது சென்றிருக்கின்றார். வரிகளை இரத்து செய்வதற்குக் குறிப்பிட்ட நிபந்தனைகளை அவர் விட்டுச் சென்றுள்ளார். நீங்கள் இப்போது அந்த நிபந்தனைகளின்படி நடக்க வேண்டும். முதலாவது நீங்கள் உங்கள் வீட்டிற்குத் திரும்பிச் செல்லுங்கள்; இரண்டாவது, உங்கள் நிலைபற்றி ஒரு கடிதம் எழுதுங்கள்; மூன்றாவது, உங்கள் குடும்பத்தின் உறுப்பினர்கள் பெயர்களைப் பட்டியலிடுங்கள். நான்காவது, அந்தக் கடிதத்தில் மூன்று சாட்சிகளின் முன்னிலையில் நீங்கள் கையெழுத்திடுங்கள். இந்த நிபந்தனைகளை நீங்கள் நிறைவேற்றும்பொழுது உங்கள் வரிகள் இரத்து செய்யப்படும்."*

*மேற்சொன்ன கதையை, கிறிஸ்து உண்மையிலேயே செய்துள்ள வற்றோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அவர் இங்கு இருந்தபோது ஒரு வார்த்தையினாலேயே பாவங்களை அடிக்கடி மன்னித்தார். எடுத்துக்காட்டாக, சிலுவையில் அவர் கள்ளனை மன்னித்தார் (லூக். 23:43). ஆயினும் கிறிஸ்து இந்தப் பூமியிலிருந்து திரும்பவும் பரலோகத் திற்குச் செல்ல ஆயத்தமான பொழுது, கிறிஸ்துவின் யுகத்தில் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பானது மக்களுக்கு எந்த நிபந்தனை களின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நிய மித்தார். அத்துடன், அவரது கட்டளையானது உலக முடிவு வரை யிலும் அமுலில் இருக்க வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார் (மத். 28:20). இப்பொழுது அந்த அரசர் சென்றிருக் கின்றார், மன்னிப்பிற்கான அவரது நிபந்தனைகள் அமுலில் இருக்கின்றன.*

## பதில் நடைமுறைப்படுத்தப்பட்டது

*சபைக்குள் பிரவேசிப்பதற்கான இந்த நிபந்தனைகள் நம் ஒவ்வொருவராலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கிறிஸ்து வின் நிறைவான கட்டளை மாற்றப்பட்டிருக்கப்படவில்லை. அது கொடுக்கப்பட்ட நாளில் இருந்தபடியே இன்றும் இருக்கின்றது. பேதுருவின் முதல் பிரசங்கத்தைக் கேட்டவர்களுக்கு இரட்சிக்கப் படுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த அதே நிபந்தனைகள்தான் இன்று நமக்கும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. சபைக்குள் பிரவேசிப்பதற்கு நிபந்தனைகளைக் கிறிஸ்து நியமித்து, அவைகளை நிறைவேற்று கின்றவர்களை அவரே சபையில் சேர்த்துக் கொள்ளுகின்றார்.*

மனிதரின் விவாதங்கள் அல்லது அறிவுரைகள் எதுவும், அவரது இறுதி உயில் அல்லது உடன்படிக்கையை மாற்றுவதில்லை. அரசர் சென்றிருக்கின்றார், கிறிஸ்துவின் யுகத்திற்கென்று அவர் நியமித்துள்ள நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

சபைக்குள் பிரவேசிப்பதற்கு அவர் நியமித்திருக்கும் நிபந்தனை களைப் பொறுத்தமட்டில் நீங்கள் எங்கு நிலை நிற்கின்றீர்கள்? நீங்கள் நம்புகின்றீர்களா? தேவனுடைய வசனமே விசுவாசத்தின் மூலப்பிறப் பிடமாய் இருக்கின்றது (ரோமர் 10:17). மனிதரின் ஞானம், கற்றுக் கொள்ளுதல் அல்லது சாதனைகள் ஆகியவை விசுவாசத்தை உண்டாக்க முடியாது. நீங்கள் தேவனை நம்புகின்றீர்களா? அவரு டைய குமாரனாகிய கிறிஸ்துவே மனுக்குலத்தின் இரட்சகர் என்பதை நீங்கள் நம்புகின்றீர்களா?

நீங்கள் உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பியிருக்கின்றீர் களா? (அப். 17:30, 31) பாவத்திலிருந்து நீங்கள் ஜீவனுள்ள தேவனிடத் தில் திரும்பியிருக்கின்றீர்களா? என்ன நேர்ந்தாலும், எங்கு வழி நடந்தாலும் தேவனுடைய சித்தத்திற்கு உங்கள் இருதயத்தை ஒப்புக்கொடுத்திருக்கின்றீர்களா?

இயேசுவை தேவனுடைய குமாரனென்றும், கர்த்தரென்றும் நீங்கள் வெளியரங்கமாக அறிக்கையிட்டிருக்கின்றீர்களா? (ரோமர் 10:10). உங்கள் வாயினாலே நீங்கள் இயேசுவே இரட்சகர் மற்றும் கர்த்தர் என்று அறிக்கை செய்திருக்கின்றீர்களா?

நீங்கள் ஞானஸ்நானப்படுத்தப்பட்டிருக்கின்றீர்களா? பிரதான கட்டளையின்படி முழுகுதலே ஞானஸ்நானமாகும் (ரோமர் 6:4). இயேசுவுக்குள்ளாக (ரோமர் 6:3; கலா. 3:27), இது பாவமன்னிப்புக் கென்று (அப். 2:38; 22:16) பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்திலே (மத். 28:19, 20) பெற்றுக்கொள்ள வேண்டியதாகும். நீங்கள் புதிய ஏற்பாட்டு முன்மாதிரியின்படியான ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கின்றீர்களா?

இன்றைய நாட்களில் ஒருவர், கிறிஸ்து தமது நிறைவான கட்டளையில் நியமித்துள்ள நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கும் போது, நமது உண்மையுள்ள கர்த்தரும் இரட்சகருமானவர் தமது சபை அல்லது இராஜ்யத்தில் அவரைச் சேர்த்துக் கொள்ளுகிறார் என்று நம்புவது நியாயமானதல்லவா? கர்த்தருடைய நிபந்தனைகளைத் தவிர்த்து விளக்கம் தர ஒருவராலும் முடியாது. இவைகளுக்குப் பதிலாக ஏதொன்றையுமோ அல்லது இவைகளைக் களங்கப்

*படுத்துகின்ற ஏதொன்றையுமோ நாம் அனுமதிக்க முடியாது. கிறிஸ்து வுக்கு உண்மையாகவே ஒப்புக்கொடுத்தல் என்பது கீழ்ப்படிதலே தவிர வேறொன்றும் இல்லை.*

## முடிவுரை

*நீங்கள் புதிய ஏற்பாட்டின் சபையில் பிரவேசித்திருக்கின்றீர்களா? இன்று நீங்கள் அதில் பிரவேசிக்க விரும்புகின்றீர்களா?*

*புதிய ஏற்பாட்டின் சபையில் பிரவேசிப்பதற்கான கர்த்தருடைய நிபந்தனைகளை உண்மையாகவே நிறைவேற்றுகின்ற எவரும் அதில் பிரவேசிக்க முடியும் என்பதே நமக்கு மாபெரும் மேன்மையான செய்தி என்பது உறுதியாகும். எல்லா நாட்டவர்களும், எல்லா இனத்தவர்களும் மற்றும் எல்லா மக்களும் அவருடைய இராஜ்யத்தில் பிரவேசித்து கிறிஸ்துவோடு ஒன்றாயிருக்க முடியும் (எபே. 2:14).*

*தொடக்கத்திலேயே அஸ்திபாரம் உண்மையானதுதான் என்று நாம் நிச்சயித்துக் கொள்வதே ஞானமுள்ள செயல் ஆகும். இரட்சிப் பிற்கான கர்த்தருடைய நிபந்தனைகளை நீங்கள் நிறைவேற்றா மலிருந்தால், அவைகளை உடனே முழுமையாக நிறைவேற்றுங்கள். அவருடைய இராஜ்யத்தில் பிரவேசித்து, இப்பொழுது முதல் அவரது இராஜ்யத்தின் பிரஜையாக அவரது இராஜ்யத்தில் மட்டுமே வாழ்க்கை நடத்துங்கள்.*

*கர்த்தருடைய சபைக்குள் நீங்கள் பிரவேசிக்காமலிருந்தால், உங்களைப் பொறுத்தமட்டில் அது உண்மையில் மதிப்புடைய தாயிருக்காது.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 318 ம் பக்கங்களில்)*

1. *கர்த்தருடைய சபையின் ஒப்பிடப்பட முடியாத மதிப்பைப் பற்றி விளக்குக.*
2. *பிரதான கட்டளையின் நிபந்தனைகள் இன்றைய கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துகின்றனவா?*
3. *சிலுவையில் இருந்த கள்ளன் இரட்சிக்கப்பட்டதுபோல இன்றைக்கு நாம் இரட்சிப்படைய முடியாது-ஏன்?*
4. *இன்றைய நாட்களில் ஒருவர் எவ்விதத்தில் சபையின்*

*உறுப்பினராக முடியும்?*

5. *இரட்சிக்கப்பட்டவர்களை மனிதர்கள் சபையில் சேர்த்துக் கொள்கின்றார்களா?*
6. *நடபடிகள் புத்தகத்தில் கிறிஸ்தவராவதற்கு செய்யப்பட்டவைகளை ஒருவர் செய்தால், நடபடிகள் புத்தகத்தில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்த வர்களுக்குச் செய்ததை தேவன் இவருக்கும் செய்ய மாட்டார் என்று நம்புவதற்குக் காரணம் ஏதாவது உண்டா?*
7. *ஒருவர், தாம் கிறிஸ்துவின் சபையில் இருப்பதை எவ்விதம் உறுதி செய்து கொள்ள முடியும்?*
8. *இரட்சிப்புக்கான கர்த்தருடைய நிபந்தனைகள் களங்கப் படுத்தப்படும்போது, பெரும்சேதம் எதுவும் செய்யப்படுகின்றதா?*

## வார்த்தை உதவிகள்

***இயேசுவின் இறுதி உயில் மற்றும் உடன்படிக்கை*** *- புதிய ஏற்பாடு (எபி. 9:15-17).*

***தனிவகைப்பட்ட*** *- மாறுபட்ட; பிரித்து வைக்கப்பட்ட. 1 பேது. 2:9ல் கிறிஸ்தவர்களைப் பற்றி, "நீங்களோ, உங்களை அந்தகாரத் தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத் தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப் பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று கூறப்படுகின்றது.*

---

*[1]சில கையெழுத்துப் பிரதிகளில் இவ்விடத்தில் "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும்" என்றுள்ளது. தமிழ் மொழிபெயர்ப்பிலும் இப்படியே உள்ளது. [2]நடபடிகளின் நம்பத்தக்க அநேக கையெழுத்துப் பிரதிகளில் அப். 8:37 வசனம் காணப்படுவதில்லை. இது, இந்த வசனமானது புதிய ஏற்பாட்டின் மூலப்பிரதியில் கிடையாது என்ற முடிவுக்கு வழி நடத்துகின்றது. ஆயினும், பிலிப்புவால் இதில் கூறப்படும் வழிநடத்துகின்ற கூற்றானது இந்தச் சூழ்நிலையில் மிகவும் இயல்பாக எழுகின்ற சிந்தனையென்று ஏற்றுக்*

கொள்ளப்படுதல் அவசியமாகின்றது. எத்தியோப்பி மந்திரி, கிறிஸ்துவைப் பற்றியோ அல்லது தீர்க்கதரிசி யாரைக் குறித்து எழுதினார் என்பதையோ அறியாதிருந்தார். கிறிஸ்துவைப் பற்றிய உரையாடலுக்குப் பின்பே அந்த மந்திரி, தாம் ஞானஸ்நானம் பெற விரும்பினார். ஆகவே, ''நீர் உம் இருதயத்தில் விசுவாசித்தால் தடையில்லை'' என்ற கூற்றானது ஞானஸ் நானத்திற்கான முன் தயாரிப்பிலிருந்து எடுத்துப் போடப்பட முடியாத தாகவே இருக்கின்றது, அது மிகவும் தகுதியானதாகவே இருக்கின்றது. இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்வதானது விசுவாசத்தை உறுதிப்படுத்துவதாகவும், விசுவாசிக்க வேண்டும் என்ற பிரதான கட்டளையிலிருந்து வளர்ந்த ஒரு நிபந்தனையாகவும் இருக்கின்றது.

| அப். நட. புத்தகத்தில் மனமாற்றத்திற்கான எடுத்துக்காட்டுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| கேள்விப்படுதல் | விசுவாசித்தல் | மனந்திரும்புதல் | அறிக்கையிடுதல் | ஞானஸ்நானம் பெறுதல் | **இரட்சிக்கப்படுதல்** |
| **யூதர்கள் அப். 2** | "அவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி" *(வ. 37)* | "மனந்திரும்பி" *(வ. 38)* | | "ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" *(வ. 38)*; "ஞானஸ்நானம் பெற்றார்கள்" *(வ. 41)* | "பாவமன்னிப்புக்கென்று" *(வ. 38)* |
| **சமாரியர்கள் அப்.8** | "அவர்கள் விசுவாசித்த போது" *(வ. 12)* | | | "ஞானஸ்நானம் பெற்றார்கள்" *(வ. 12)* | |
| **எத்தியோப்பிய மந்திரி அப். 8** | ("நீர்... விசுவாசித்தால்") *(வ. 37)* | | ["இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்"] *(வ. 37)* | "ஞானஸ்நானம் பெற" *(வ. 36)*; "பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்" *(வ. 38)* | "சந்தோஷத்தோடே தன் வழியே போனான்" *(வ. 39)* |
| **சவுல் அப். 9; 22, 26** | | உபவாசித்து ஜெபித்தல் *(9:9, 11)* | "ஆண்டவரே" *(9:5)* | "ஞானஸ்நானம் பெற்றான்" *(9:18)*; ஞானஸ்நானம் பெற்று" *(22:16)* | "உன் பாவங்கள் போகக் கழுவப்படு" *(22:16)* |
| **கொர்நேலியு அப். 10, 11** | "அவரை விசுவாசிக்கிறவன்" *(10:43)* | "ஜீவக் கேதுவான மனந்திரும்புதல்" *(11:18)* | | "ஞானஸ்நானம்" *(10:47)* "ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான்" *(10:48)* | "பாவமன்னிப்பை" *(10:43)* |
| **லீதியாள் அப். 16** | | | | "ஞானஸ்நானம் பெற்ற பின்பு" *(வ. 15)* | |
| **சிறைச் சாலைக்காரன் அப். 16** | "கர்த்தராகிய இயேசுவை விசுவாசி" *(வ. 31)*; "விசுவாச முள்ளவனாகி" *(வ. 34)* | "அவர்களுடைய காயங்களைக் கழுவினான்" *(வ. 33)* | | "ஞானஸ்நானம் பெற்றார்கள்" *(வ. 33)* | "நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" *(வ. 31)*; "மனமகிழ்ச்சி யாயிருந்தான்" *(வ. 34)* |
| **கொரிந்தியர்கள் அப். 18** | "விசுவாசித்து" *(வ. 8)* | | | "ஞானஸ்நானம் பெற்றார்கள்" *(வ. 8)* | |